1996 ஆகஸ்ட் 20]

(அ) வால்பாறையில் உள்ள தொழிலாளர்கள் தங்கும் சிங்காரவேலர் இல்லத்தில் எத்தனை படுக்கை வசதிகள் உள்ளன?

(ஆ) அவற்றை கூடுதலாக்கும் திட்டம் அரசின் பார்வையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வால்பாறை தொழிலாளர்கள் தங்கும் இல்லமான சிங்காரவேலர் இல்லத்தில் முன்பு 25 படுக்கைகள் கொண்ட பொது அறை இருந்தது. தற்பொழுது இங்கு பொதுப்பணித்துறை மூலம் சிறப்பு பழுதுபார்க்கும் பணி ரூ. 6,38,828 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி தனி அறை நான்கில் 10 படுக்கை வசதிகளும், பொது அறை மூன்றில் 20 படுக்கை வசதிகளும் கொண்டதாக இருக்கும். பழுது பார்க்கும் பணி முடிந்தபின் மொத்தம் 30 படுக்கைகள் இருக்கும்.

32--

வீரப்பள்ளியில் பகுதி நேரக்கடை திறத்தல்

வினா எண் *531*--**திரு. ஆர். மகேந்திரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதியில் உள்ள வீரப்பள்ளி கிராமத்திற்கு தனியாக பகுதிநேரக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. வே. தங்கப் பாண்டியன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதியில் உள்ள வீரப்பள்ளி கிராமத்தில் தனியாக பகுதிநேரக் கடை திறப்பதற்கு அந்த கிராம மக்கள் இலவசமாக கட்டடம் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இசைவு வழங்கப்பட்டுள்ளது.